# Chapter 5
# மாணவர்கள் நினைத்தால்...

---

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

**கேள்வி** 1.
முயற்சி இச்சொல்லின் பொருள்
அ) ஆக்கம்
ஆ) இடைவிடாத உழைப்பு
இ) இயக்கம்
ஈ) பக்கம்
**விடை:**
ஆ) இடைவிடாத உழைப்பு

**கேள்வி** 2.
ஆன்றோர் இச்சொல்லின் பொருள்
அ) பெற்றோர்
ஆ) உற்றோர்
இ) சுற்றோர்
ஈ) பெரியோர்
**விடை:**
ஈ) பெரியோர்

**கேள்வி** 3.
வைத்திருந்தனர் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) வைத்து + யிருந்தனர்
ஆ) வைத் + இருந்தனர்
இ) வைத்து + இருந்தனர்
ஈ) வைத் + திருந்தனர்
**விடை:**
இ) வைத்து + இருந்தனர்

**கேள்வி** 4.
வீதியெங்கும் என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ)வீதி + எங்கும்
ஆ) வீதி + யெங்கும்

இ) வீதியெ + ங்கும்
ஈ) வீதி + அங்கும்
**விடை:**
அ) வீதி + எங்கும்

**கேள்வி** 5.
நெகிழி + அற்ற என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
அ) நெகிழி அற்ற
ஆ) நெகிழியற்ற
இ) நெகிழ்அற்ற
ஈ) நெகிழ்யற்ற
**விடை:**
ஆ) நெகிழியற்ற

**கேள்வி** 6.
பாதிப்பு + அடைகிறது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
அ) பாதிப்அடைகிறது
ஆ) பாதிப்பு அடைகிறது
இ) பாதிப்படைகிறது
ஈ) பாதிபடைகிறது
**விடை:**
இ) பாதிப்படைகிறது

## வினாக்களுக்கு விடையளி

**கேள்வி** 1.
மேரி இனி யாருடன் விளையாடப் போவதாகக் கூறினாள்?
**விடை:**
மேரி இனி தான் தன் வீட்டுக் கன்றுக்குட்டியுடன் விளையாடப் போவதாகக் கூறினாள்.

**கேள்வி** 2.
பசு எதனால் இறந்தது? நெகிழிப்
**விடை:**
பொருள்களை உண்டதால் பசு இறந்தது.

**கேள்வி** 3.
நெகிழியினால் ஏற்படும் தீமைகள் இரண்டினை எழுதுக.
**விடை:**
நெகிழி மக்காத குப்பையாக மாறி சாக்கடையில் ஈ, கொசு, உற்பத்தியாக

உதவுகிறது. இது ஓசோன் படலத்தைப் பாதிப்பதால் சூரியனின் புற ஊதாக் கதிர்கள் நம்மைத் தாக்குகின்றன.

பொருத்தமான சொல்லை எடுத்து நிரப்புக

**கேள்வி** 1.
நெகிழியற்ற _______________ உருவாக்குவோம். (உலகை /உளகை)
**விடை:**
உலகை

**கேள்வி** 2.
நெகிழியை ஒழிப்போம் _______________ காப்போம். (மன்வளம் / மண்வளம்)
**விடை:**
மண்வளம்

**கேள்வி** 3.
மேரி _______________ குறித்து ஓடிவந்தாள். (மகிள்வோடு / மகிழ்வோடு)
**விடை:**
மகிழ்வோடு

**கேள்வி** 4.
எறும்பு _______________ கல்லும் தேயும். (ஊரக் / ஊறக்)
**விடை:**
ஊரக்

**கேள்வி** 5.
துணிப்பை என்பது _______________ (எளிதானது / எலிதானது)
**விடை:**
எளிதானது


## இணைந்து செய்வோம்








**விடை:**




சொற்களை இனம்கண்டு அதற்குரிய பெட்டிக்குக் கீழே எழுதுக.

கண்ணாடித்துண்டு, நெகிழிப்பை, காகிதத்தாள், சணல்பை, பீங்கான் தட்டு, இலை




1. ________________
2. ________________
3. ________________




1. ________________
2. ________________
3. ________________

**விடை:**




1. காகிதத் தாள்
2. சணல் பை
3. இலை




1. கண்ணாடித் துண்டு
2. நெகிழிப் பை
3. பீங்கான் தட்டு

## ஒருமை, பன்மை அறிவோமா?

ஒருமைச் சொல்லுக்கு உரிய பன்மைச் சொல்லை எழுதுவோம்.

பந்து

ஆமை

முயல்

பூனை



பூ

விழா

பசு

வினா

படம்

மரம்

சிங்கம்

காகம்

பல்

கல்

சொல்

புல்

முள்

தாள்

ஆள்

பொருள்

**விடை:**



| | |
|---|---|
| பந்து | பந்துகள் |
| ஆமை | ஆமைகள் |
| முயல் | முயல்கள் |
| பூனை | பூனைகள் |





| | |
|---|---|
| பூ | பூக்கள் |
| விழா | விழாக்கள் |
| பசு | பசுக்கள் |
| வினா | வினாக்கள் |



| | |
|---|---|
| படம் | படங்கள் |
| மரம் | மரங்கள் |
| சிங்கம் | சிங்கங்கள் |
| காகம் | காகங்கள் |

| | |
|---|---|
| பல் | பற்கள் |
| கல் | கற்கள் |
| சொல் | சொற்கள் |
| புல் | புற்கள் |





| | |
|---|---|
| முள் | முட்கள் |
| தாள் | தாட்கள் |
| ஆள் | ஆட்கள் |
| பொருள் | பொருட்கள் |